சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

**முன்னிலை: திரு.P.S. ரஸ்கின் ராஜ், B.A., L.L.B.,**

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் வியாழக்கிழமை

*அசல் வழக்கு எண். 10/2024*

**(CNR No. TNMD240000112024)**

கனரா வங்கி,
உசிலம்பட்டி கிளை,
அதன் முதுநிலை மேலாளர் மூலமாக ..... வாதி

/ எதிர் /

1. V. க்யூரி நிஷா
2. M. வேல்முருகன் (*Exonerated) ..... பிரதிவாதிகள்

(* Amended the plaint as per Order of I.A.717/2024, Dt.16.10.2024)

இந்த வழக்கு இந்நீதிமன்றம் முன்பு 16.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.கணபதி அவர்களும், 1வது பிரதிவாதி தரப்பில் தனிநபர் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், 2வது பிரதிவாதி இறந்துவிட்டதாக திருப்பப்பட்டதாலும் அவர்கள் தோன்றாத் தரப்பினரர்களாகக் கருதப்பட்டு வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியம், வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ஒருதலைபட்ச…

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது பிராதுத் தொகையான ரூ.3,29,095/-ஐ வாதிக்கு, பிரதிவாதிகள் செலுத்தக் கோரியும் மற்றும் வழக்கு தாக்கல் செய்த

தேதியிலிருந்து வழக்கு முடியும் தேதி வரை 13.50% வட்டியுடன் செலுத்தக் கோரியும், செலவுத் தொகைக்கும் தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும்.

1**. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு :**

1ம் பிரதிவாதி கல்லூரியில் படிப்பதற்காக கல்வி கடன் கோரி 2ம் பிரதிவாதியுடன் சேர்ந்து வாதி வங்கியை அணுகி ரூ.1,76,000/-ஐ கடனாக கோரி விண்ணப்பித்தார். அக்கடனை ஆண்டுக்கு 13.50% வட்டியுடன் 60 மாதத் தவணைகளில் 1ம் பிரதிவாதியின் கல்லூரி கல்வி முடிந்த 12 மாதத்திற்கு பின்போ அல்லது வேலை கிடைத்த 6 மாதத்திற்குள் இந்த இரண்டில் எது முன்போ அது முதல் மாதம் தோறும் செலுத்தி வரவும் 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டார். 1ம் பிரதிவாதி பெறுகின்ற அக்கடனுக்கு 2ம் பிரதிவாதி கூட்டுக்கடனாளியாக இருக்கவும் ஒப்புக்கொண்டார். அக்கடனுக்கு ஆதரவாக 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் சேர்ந்து 19.10.2012 அன்று வாதி வங்கிக்கு கல்வி கடன் ஒப்பந்தம் ஒன்றை எழுதிக்கொடுத்தனர். அதன்பின்னர் கடன்தொகையை முறையாக செலுத்தவில்லை. இதுவரை பிரதிவாதிகள் வாதிக்கு வட்டி தொகையோ, அசல் தொகையோ செலுத்தவில்லை என்பதால் வாதி அசல் தொகையையும், அதற்குண்டான வட்டியையும் வசூல் செய்ய இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளார்.

2. பிரதிவாதிகள் தரப்பில் 1வது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்டதாலும் அவர்கள் தோன்றாத்தரப்பினரர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வ.சா.ஆ.1 முதல் வ.சா.ஆ.8 சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

3. வாதி கேட்கும் பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதை பரிசீலிக்கும் போது வாதி தன்னுடைய வழக்கினை மெய்ப்பிப்பதற்காக 19.09.2012ம் தேதிய கல்விக்கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 19.10.2012ம் தேதிய கடன் வழங்கல் கடிதம் அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 19.10.2012ம் தேதிய கல்விக்கடன் ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 13.08.2012ம் தேதிய 1ம் பிரதிவாதிக்கு கல்லூரியில் வழங்கிய சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 16.09.2017, 01.09.2020, 25.07.2023, ஆகிய தேதிகளிட்ட கடன் உயிரூட்டுக் கடிதங்கள் அசல்கள் முறையே வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 ஆகவும், 24.11.2023ம் தேதிய கடன் கணக்குப்பட்டியல் அலுவலக நகல் வா.சா.ஆ.8 ஆகவும் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் 1வது பிரதிவாதி நீதிமன்றத்தில் ஆஜராகாததாலும், 2ம் பிரதிவாதி இறந்துவிட்டதாலும் அவர்கள் தோன்றாத்தரப்பினரர்களாக உத்தரவு செய்யப்பட்டுள்ளார்கள். 1ம் பிரதிவாதி தோன்றாத்தரப்பினராக இருந்ததால் வாதியின் வழக்கு விபரங்களை 1ம் பிரதிவாதி ஒப்புக்கொண்டுள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. 2ம் பிரதிவாதி இறந்துவிட்டதால் அவர் இவ்வழக்கிலிருந்து

விடுவிக்கப்பட்டுள்ளார். எனவே 1வது பிரதிவாதிக்கு எதிரான இந்த வழக்கு வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. வாதியிடம் வாங்கிய கடனை 1வது பிரதிவாதி திருப்பி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார். எனவே வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, வாதியின் வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு வாதிக்கு, 1வது பிரதிவாதி பிராதுத் தொகை ரூ.3,29,095/-ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி அசல் தொகை ரூ.1,76,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த தேதி முதல் தொகை செலுத்தி முடிக்கும் தேதி வரை 13.50% ஆண்டு வட்டியுடன் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் மேற்கொண்டு இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 26-ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.26 16:15:38 +0530

சார்பு நீதிபதி
உசிலம்பட்டி

**<u>வாதி தரப்பு சாட்சி :</u>**

வா.சா.1 ஆல்பின்ராஜ்

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1. | 19.09.2012 | கல்விக்கடன் விண்ணப்பம் அசல் |
| வா.சா.ஆ.2 | 19.10.2012 | கடன் வழங்கல் கடிதம் அசல் |
| வா.சா.ஆ.3 | 19.10.2012 | கல்விக்கடன் ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | 13.08.2012 | 1ம் பிரதிவாதிக்கு கல்லூரியில் வழங்கிய சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.5 | 16.09.2017 | கடன் உயிரூட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.6 | 01.09.2020 | கடன் உயிரூட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.7 | 25.07.2023 | கடன் உயிரூட்டுக்கடிதம் அசல் |
| வா.சா.ஆ.8 | 24.11.2023 | கடன் கணக்குப்பட்டியல் அலுவலக நகல் |

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2026.03.26 16:16:13 +0530

சார்பு நீதிபதி,
உசிலம்பட்டி.